தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 9, திருவள்ளுவர் ஆண்டு—2054

2023 மார்ச் 23, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு."

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவார்கள்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. த. மாரிமுத்து, திரு. ப. தங்கவேலு, திரு. சி.நா.மீ. உபயதுல்லா, திரு. கு. சீனிவாசன் ஆகியோர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. த. மாரிமுத்து அவர்கள் 16–6–2022 அன்றும், திரு. ப. தங்கவேலு அவர்கள் 9–2–2023 அன்றும், திரு. சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் 19–2–2023 அன்றும் மற்றும் திரு. கு. சீனிவாசன் அவர்கள் 3–3–2023 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. த. மாரிமுத்து அவர்கள் 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் குளத்தூர் தொகுதியிலிருந்து

[பேரவைத் தலைவர்] [2023 மார்ச் 23

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ப. தங்கவேலு அவர்கள் 1980–1984 ஆம் ஆண்டுகளில் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சி.நா.மீ. உபயதுல்லா அவர்கள் 1989–1991, 1996–2001, 2001–2006 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் தஞ்சாவூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள். மேலும், 2006–2011 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் சிறப்புற பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கு. சீனிவாசன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

பிரபல பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். பிரபல பின்னணிப் பாடகி திருமதி வாணி ஜெயராம் அவர்கள் மறைவு குறித்து.